அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்
ஜீவகாருண்ணிய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் I.] DECEMBER, 1900 ௵ டிசம்பர். [இலக்கம். 1.

12 1812

ஜீவகாருணியமுள்ள விக்டோரியா மகாராணியார் மங்கள வாழ்த்து.

மோகனராகம்.] [ஆதிதாளம்.

மங்களம் பாடுவோம் மகாராணியார்
மகிமை நாடுவோம்.

1. துங்க மருவுங் கருணை பொறுமை
தூய்மை பெருமையும்,
துலங்க வுலக முழுதும் இரவி
சூழ்ந்து விளங்கவே.
மங்களம் பாடுவோம் மகாராணியார்
மகிமை நாடுவோம்.

2. எங்கும் வானம் பொழிந்து செழிக்க
எல்லா வுயிரையும்
எளிமை யின்றி யொப்ப நோக்கி
இன்பந் தழைக்கவே.
மங்களம் பாடுவோம் ம...
மகிமை...

3. இந்தியா சக்கர வர்த்தினி யாகி
எல்லா வேந்தரும்
எழுந்து வாழ்த்தி வணங்க இருக்கும்
இறைமை நோக்கியே.

மங்களம் பாடுவோம் மகாராணியார்
மகிமை நாடுவோம்.

4. நீதி யான சட்ட திட்டங்கள்
நியமித் தெங்குமே
நிகழச் செய்யும் ஆக்கியா சக்கரம்
நிலைத்து நிற்கவே.

மங்களம் பாடுவோம் மகாராணியார்
மகிமை நாடுவோம்.

மாட்சிமை தங்கிய விக்டோரியா அம்மை
வையகத் தெந்நாளும்
வாழ்வு பொருந்தி யிருக்கக் கடவுளை
வாழ்த்தி வாழ்த்தியே.

மங்களம் பாடுவோம் மகாராணியார்
மகிமை நாடுவோம்.

வர்த்தமானக் குறிப்புகளும், விசேஷங்களும்.

குதிரை வால் கத்தரித்தல்: — லண்டன்மா நகரத்தில் ஏற்பட்டிருக்கும் ராஜகீய ஜீவ ஹிம்ஸா நிவாரண ஸபைக்குச் சில நாளைக்குமுன்னே ஒரு பெரிய பாக்கியம் கிடைத்தது. அதாவது, குதிரைகளுக்கு வாலைக் குறுக வெட்டிக் கூழைவாலாக்குவது கூடாதென்பதற்காக அந்தச் சபையார் பாடுபட்டு வருகிற நன்முயற்சியில் நமது மாட்சிமை தங்கிய மஹாராணியாரும் நல்லபிப்பிராயப்பட்டுச் சேர்ந்துகொண்டிருக்கிறார். ராஜாங்கத்துக் குதிரைச் சாலைகளிலுள்ள பெரிதும் சிறிதுமான பலவகைக் குதிரைகளுக்கும் ஒருபொழுதும் வால்மயிரைக் கத்தரிக்கக்கூடாதென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதனால் பிரிட்டிஷ் தீவுகள் முழுமையுமுள்ள கூலிவண்டிக் குதிரைகள், சொந்தவண்டிக் குதிரைகள் ஆகிய எல்லாவற்றிற்கும் கூடியசீக்கிரத்தில் இந்த உத்தரவினாலுண்டான பெரிய பாக்கியம் கிடைக்குமென்று எதிர்பார்க்கிறோம். இதுமாத்திர [illegible] சக்கரவர்த்தினியார் சிறு பிராயத் [illegible] திரைச் சவாரி செய்துவந்த [illegible] க் குதிரைகளும் [illegible]

சுமைவண்டி எருத்துமாடுகளை அடிக்கக் கூடாதென்பது: — திரான்ஸ்வால் நாட்டுப் பல நகரங்களுக்குப் பிரித்தானியர் படையெடுத்துச் சென்றபொழுது, அந்தப் படையின் சாமான்வண்டிகளை யோட்டிக்கொண்டுபோன காப்பிரி ஜனங்கள், அவ்வண்டிகளை யிழுக்கமாட்டாமல் வருந்தின மாடுகளைச் சாட்டைகளால் அடித்துத் துன்பப்படுத்தினார்கள். ஸேனாபதியான லார்டு ராபர்ட்ஸ் என்பவர் வண்டிமாடுகளின் முதுகின்மேல் சாட்டையால் அடித்த அடையாளங்களைப் பார்த்துப் பரிதாபமடைந்து, இனியொருவரும் எருத்துமாடுகளை எவ்விதத்திலும் அடிக்கக்கூடாதென்றும், அவசியமானால் அவர்கள் படீரென்று ஓசையுண்டாகும்படி சாட்டைகளை வீசி, அந்தச் சத்தத்தினால் அவைகளை அதட்டி யோட்டலாம் என்றும் எழுத்துமூலமான உத்தரவு பிறப்பித்தார். சேனைகள் விஷயத்திலும், சேனைகளுக்குச் சாமான் சுமந்துகொண்டு போகும் வாயில்லா ஜந்துக்கள் விஷயத்திலும் அந்தச் சேனாபதிக்கு இருந்த இவ்விதமான அன்பானது, அவர் ஜீவகாருணியமுள்ள சேனாபதியென்பதைத் தெளிவாகத் தெரிவிக்கின்றதென ஒரு பத்திராதிபர் புகழ்ந்து பேசியிருக்கிறார்.

இருப்புப்பாதை யிடையேவந்த நாயைக் காப்பாற்றியது: — இங்கிலாந்திலே இருப்புப்பா [illegible] காவில் நகரத்து மத்தியநிலை ஸ்தா

னத்திற்குச் சமீபத்தில் வந்துகொண்டிருக்கும்பொழுது, அங்கே ஒரு நாய் அந்த வண்டித்தொடர் ஓடுகிற தண்டவாளங்களினிடையே தப்பிவந்துவிட, அதைக்கண்டு அந்த வண்டியோட்டியான தோமஸ் ஸ்காட் என்னும் ஒரு சூரன், அந்த நாயை வண்டியின்கீழ் அகப்பட்டுக்கொள்ளாதபடி காப்பாற்றினான். அதற்காக அவன் செய்த முயற்சியில் அவனுக்கு நல்ல அடிபட்டு இரண்டு கால்களும் போய்விட்டன. இப்படிப்பட்ட ஆபத்துவேளையில் அவன் காட்டிய ஜீவகாருணியத்தை அவ்விடத்துப் பத்திராதிபர்கள் பலரும் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். இந்த உதாரகுணத்தைப்பற்றி நியூகாஸில் நகரத்துத் தருமவைத்தியசாலையின் அதிகாரிகள் வியந்துபேசி, ஒரு யோக்கியதாபத்திரிகையுடனே ராஜகீய ஜீவ ஹிம்ஸா நிவாரண ஸபையாருக்கு அவனுடைய யோக்கியதையை அறிவிக்க, அவனுடைய ஜீவனோபாயத்திற்காக, 1259 பவுன் நன்கொடையாகச் சேர்த்துக் கொடுக்கப்பட்டது. மகாராணியாரும் அவன்விஷயத்தில் பரிதாபப்பட்டு உபசாரபத்திரிகை யெழுதியதுமன்றித் தாமும் சந்தாபணம் கொடுத்தனுப்பினர்.

யஜமானனைக் காப்பாற்றின இரண்டு நன்றியுள்ள நாய்கள்:—மேனாட்டில் வாலே என்னும் மாகாணத்தில் மீடன் என்னும் இடத்திலே கடல் மட்டத்திற்கு 600 அடி உயரத்திற்குமேல் ஒரு மலைமீது சத்திரமொன்றுண்டு. அந்தச் சத்திரத்தில் ஒருவன் தனியே வாஸஞ்செய்துகொண்டிருந்தான். அவனுடைய இரண்டு நாய்களின் சாமர்த்தியத்தையும் விசுவாஸத்தையும்பற்றிச் சிறந்த கதை ஒன்று உண்டு: அதாவது, அந்தச் சத்திரக்காரன் பனிநாளில் ஒருநாள் கட்டைவெட்டச் சத்திரத்திற்கு வெளியே போயிருந்தான். இரண்டு நாய்களும் அவனுடனே துணையாகப் புறப்பட்டுப் போயின. போனவிடத்தில் அவர்கள் நின்றவிடத்திலே திடீரென்று பனிக்கட்டிகள் விழுந்தன. சத்திரக்காரன் அதில் அமிழ்ந்துபோனான். நாய்கள்மாத்திரம் மெல்லத் தப்பித்துக்கொண்டன. அந்த நாய்கள் யஜமானன் மூழ்கிப்போனது கண்டு அவனை விடுவிக்கத் தம்மாலாகாமல் வெகுவேகமாக அம்மலையைவிட்டிறங்கின. அந்தக் கணவாயின் அடிப்புறத்தில் அந்தச் சத்திரத்து முதலாளி பனிநாளில் வாஸஞ்செய்வது வழக்கம். இந்த நாய்கள் அவனிடம் போய்ப் பலவிதமான குறிகள் காட்டித் தம்முடைய அபிப்பிராயத்தை அவனுக்கு அறிவித்தன. ஒரு நாளுமில்லாமல் புதிதாகத் தம்மிடம் வந்து அந்த நாய்கள் செய்யும் பற்பலவான அபிநயங்களாலும் குரைத்தலினாலும், தன்னுடைய ஆல்ப்ஸ்மலைச் சத்திரத்தில் ஏதோ ஒரு ஆபத்து நேர்ந்திருக்கவேண்டுமென்று தெரிந்து, உடனே மூன்றுபேரைக் கூட்டிக்கொண்டு அவன் மலைக்குப் போனான். நாய்களும் கூடவே போயின. மேலே ஏறிப்போக ஒன்பது மணிநேரம் சென்றது. அங்கே அந்த நாய்கள் இந்த இடத்தில் அபாயம் நேரிட்டிருக்கிறதென்று வாயினால் விளங்கச்சொல்வதுபோல் நன்றாக அவனுக்குக் குறிப்புக்களால் அறிவித்தன. அங்கே சத்திரக்காரன் பனியில் புதைந்திருப்பதைப்பார்த்து அவர்கள் அவனைப் பெயர்த்து எடுத்தார்கள். அப்பொழுது அவன் சத்துவமெல்லாம் ஒடுங்கிப்போயிருந்தாலும் உயிரோடிருந்தான். பிறகு சீக்கிரமே அவனுடைய சரீரம் சவுக்கியமாயிற்று.

சண்டைக்கோழிக் கொண்டையறுத்தல்:—விநோதம் காட்டுவதற்காக வளர்க்கும் சண்டைக் கோழிகளுக்குத் தலையிலுள்ள கொண்டையைக் கத்தரிக்கிற கெட்ட வழக்கம் கூடாதென்று இங்கிலாந்திலே குருபீடத்திலிருக்கும் பெரிய துரைமார் முதலான பலர் கையொப்பமிட்டு ஆக்ஷேபித்திருக்கிறார்கள்.

விடுமுறைநாள்:—இவ்வுலகத்தில் கருணையென்பது மற்ற எல்லாப் பொருளைப்பார்க்கிலும் மிகவும் நயமானது. ஆனாலும், இவ்வுலகம் முழுவதையும் இதிலுள்ள சகலமான சம்பத்துக்களையும் ஒன்று சேர்த்து ஒரு தட்டில் வைத்து நிறுத்தாலும், அவைகள் எல்லாவற்றினும் கருணையே கனமுள்ளதாகும். ஓயாமல் உழைக்கிற எருதுகளும், பொறுமையாகப் பாடுபடுகிற குதிரைகளும், ஓய்வுநாள் இப்படிப்பட்டதென்பதே தெரியாத நாய்களும் பூனைகளும் பலவுண்டு. அவைகளுக்குக் கொஞ்சம் ஓய்வு உண்டாகும்படி உதவிசெய்ய உங்களாலாகாதா? அவற்றின் யஜமானர்களிடம் போய் அந்தப் பிராணிகளைப்பற்றிச் சற்றுப் புகழ்ந்து பேசுவீர்களானால், அவைகள் தங்கள் அன்புள்ள நோக்கினால் உங்களை விசேஷமாக வாழ்த்தும். அவற்றிற்கு மிகக் கொடியதான ஒரு உதையாவது, ஒரு கடுஞ்சொல்லாவது நேரிடாமலிருக்கப் பிரயத்தனப்படுவீர்களானால், அதுவும் அவற்றிற்கு உதவியான செய்கையேயாகும்.

சிற்றுயிர்மேல் அன்பு பாராட்டல்.

(கலிவிருத்தம்.)

மன்னும் பற்பல மடங்களும் கோயிலும்
துன்னும் சாலையும் சோலையும் பார்க்கலாம்
மின்னும் சிற்றுயிர் மேல்வைக்கும் அன்பையோ
பன்னும் பூமியில் பார்ப்ப தரியதே!

எந்த வேளையு மெப்பொழு துஞ்செய்து
வந்த துன்பங்கள் மாற்ற உயிர்தரும்
இந்த ஜந்துவு மீசன் படைப்பே! சு
தந்தி ரத்தைத் தடுத்தலும் நீதியோ?

பக்ஷிஜாதியின் உயிர் வாழ்க்கை.

பக்ஷிகள் பதினாயிரக்கணக்கா யிருக்கின்றனவே; அவைகளுக்கு இரை எங்கே கிடைக்கும்? அவை எவ்வாறு ஜீவிக்கின்றன? என்று அவற்றைக்

கூட்டங்கூட்டமாகக் கண்டவர்கள் ஆச்சரியப் படுவார்கள். அவை அநேகமாகப் புழுக்களையும் பூச்சிகளையும் தின்று ஜீவிக்கின்றன. அவை ஓரிடத்தில் நிலைகொள்ளாமல் இரைக்காக வெகுதூரம் பறந்துபோகின்றன; கடற்கரைக்கும்போவதுண்டு. அவை சில தருணங்களில் கூடுகெட்ட வீட்டுக்குள் வந்து இறப்புக்கூரையையிழுத்துத் தொந்தரைசெய்வதாகக் காணப்பட்டாலும், குடித்தனக்காரர்களுக்கு அவை எந்தக்காலத்திலும் அதிகமான உபகாரம் செய்கின்றன: பயிர்களையும் புற்களையும் அரிக்கின்ற பல பூச்சிகளை இந்தப் பக்ஷிகள் பிடித்துத்தின்று பயிர்களை நன்றாக வளரச்செய்கின்றன; ஆடுமாடுகளை வருத்தும் உண்ணிமுதலான பூச்சிகளைப் போக்கி அவைகளைப் போஷிக்கின்றன; மரங்களை வளரவொட்டாமல் அழிக்கும் கம்பளிப் பூச்சிகளை யொழிக்கின்றன. இப்படி இந்தப் பறவைகளால் அழிக்கப்படுகிற விஷப்பூச்சிகள் இவ்வளவென்று கணக்கிட்டுச் சொல்ல ஒருவராலுமாகாது; அவை லக்ஷக்கணக்காயிருக்கின்றன.

போர்க்களத்துக் குதிரைகள்.

நாளது ஞூ தென் ஆப்பிரிக்காகண்டத்திலே கோரமான யுத்தம்நடந்த செய்தி தெரியுமே. அங்கே நூறு மைல் விஸ்தீரணமான ஒரு பெரிய போர்க்களத்திலே நடந்த சண்டையில்பீரங்கிவண்டியிழுத்துப்போன பற்பல் குதிரைகள் குண்டுபட்டு விழுந்து பட்டபாட்டை என்னவென்று சொல்லலாம்! அதை விவரித்து எழுத எட்டிலுமிடமில்லை; அந்தக் கோரத்தைச் சொல்ல வாயுமெழவில்லை. சத்துரு பூமியின் மத்தியில் அடிபட்டு வீழ்ந்த குதிரைகள் பத்து இருபதுநாள் வரையிலும் தீனியும் தண்ணீருமில்லாமல் வருந்தி மரணாவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்த படைவீரர்களும் மற்றவர்களும், காயம்பட்டவுடனே மாண்டுபோன குதிரைகளைவிட, குற்றுயிராய்விழுந்து உயிர் போகாமல் மரணாவஸ்தைப்படுகிற குதிரைகளின் கதி மிகவும் கேடுகெட்டதென்று பரிதாபத்துடனே சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு படைவீரருக்கும் ஊன்றுகோல்போலிருந்த குதிரைகள் திடீரென்று அடிபட்டு வண்டிகளின் பக்கத்திலே வீழ்ந்துபோக, அவற்றிற்குச் சிகிச்சோபசாரம் செய்யவும் தீனி அளிக்கவும் வாய்க்காமல், அவைகளை அப்படியே விட்டுப் போய்விடுகிறார்கள். இனிமேல் போர்க்கு உதவாதென்று அநாதையாகக் கைவிட்ட அக்குதிரைகளைக் கழுகுகளும்கூளிகளும் சூழ்ந்துகொண்டு குண்டுபட்ட ரணங்களைக் கொடுமையாகக் குத்திப் பிடுங்குவது மிகவும் கோரமான காட்சியாயிருக்கிறது. குதிரைகளை இப்படி இம்சையும் மரணாவஸ்தையும்பட்டுக்கொண்டிருக்கும்படி கைவிடலாகாதென்றும், சொற்பகாயம்பட்ட குதிரைகளுக்குச் சிகிச்சோபசாரம் செய்வது அவசியமென்றும், மரணகாயம்பட்ட குதிரைகளை உடனே சுட்டுவிடுவது பெரிய உபகாரமென்றும் ஜீவஹிம்ஸை நிவாரண சங்கத்தார் பரிந்துபேசுகிறார்கள். இத்தன்மையான ஏற்பாடு இப்பொழுது செய்யாவிட்டால், பிற்காலத்தில் நடக்கும் யுத்தங்களிலும் சொற்பகாயம்பட்ட குதிரைகளும் ஆயிரக்கணக்காக மாண்டுபோக நேரிடுமேயென்றும் மேற்படிச் சங்கத்தார் விசாரப்படுகிறார்கள். நட்டாற்றிலே கைவிடுகிறது நன்மையாகுமா?

இரண்டு குதிரை மட்டங்கள்.

(ஒரு சம்பாஷணை.)

முதலில் ஒன்று சொல்லுகிறது:—நான் ஒன்றும் குற்றம் சொல்லி முறையிடுவதற்கு இடமில்லை; இப்பொழுது நடந்துவருகிற ஏற்பாடே மிகவும் சரியானது என்று நான் உறுதியாகச் சொல்வேன். நமக்கு நமது யஜமானர்கள் செய்வதெல்லாம் சரியே. நாள்தோறும் என்னை நன்றாகத் தேய்த்துக் கழுவி மயிரெல்லாம் மழமழவென்று மினுக்காகும்படி செய்கிறார்கள். கைகளால் மெதுவாகத் தடவிக்கொடுக்கிறார்கள். எனது யஜமானியும் என்னிடத்தில் அன்புள்ளவளாகி நான் செய்வதெல்லாம் சரியேயென்று சந்தோஷப்படுகிறாள். வேலையின்றி இளைப்பாறியிருக்க எனக்கு ஒழிவு கிடைக்கிறது; அப்பொழுது நான் என்னிஷ்டப்படி உலாவித் திரிவேன்; அல்லது ஏதேனும் ஒரு நிழல்மரத்து அடியில் படுத்து இளைப்பாறுவேன். ஆதலால், இந்தப் பாக்கியம் நமக்கு என்றைக்கும் குறையாமலிருக்கவேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன் என்று சந்தோஷமாகச் சொல்லியது.

மற்றொன்று சொல்லுகிறது: — அதென்ன நீ அப்படிச் சொல்லுகிறாய்? இப்பொழுதுள்ள ஏற்பாடு அத்தனையும் அநியாயமானதென்று நான் உறுதியாய்ச் சொல்வேன். நடக்கிற செய்கைகளெல்லாம் அக்கிரமமே. என் யஜமானன் தான்மட்டும் திருப்தியாய்ப் புசித்துக் குடித்து, என்னைப் பட்டினியாய்ப் பரிதபிக்க விடுகிறானே. என் எளிய

கால்களை நீளமான கயிற்றால் கட்டிவிடுகிறான். எனக்கு அவன் ஒருபோதும் உபசாரம் செய்வதில்லை; நானெப்பொழுதும் தாங்கமாட்டாத சுமையைச் சுமந்து கொண்டுபோவதே யென் தலைவிதி யென்று எண்ணியிருக்கிறான். மேலும் அதிகாலையில் எழுந்திருப்பதும், இராத்திரி வெகுநேரம் கழித்து வேலையினின்று விடுபடுவதும், பெரிய துர்ப்பாக்கியமன்றோ? இப்படி ஓய்ச்சலொழிவில்லாமல் உழைக்கத்தானோ நமததலையி லெழுதினான்! சீக்கிரமே இதற்கு அவர்கள் ஏதாவது பரிகாரம் தேடாவிட்டால் நாமெல்லாம் ஒன்றுகூடி எதிர்க்கத் தலைப்படுவோம். கடைசியில் எல்லாம் அடங்கிப்போய்விடும் என்று கோபத்துடனே கூறிற்று.

ஜீவஹிம்சை நிவாரணச் சட்டம்.

பிடித்துப் பழக்காமல் தன்னிச்சையாகத் திரிகிற ஜந்துக்களை வேண்டுமென்று பிடித்துத் துன்பப்படுத்துவது கூடாதென்று அதற்காக ஒரு சட்டம் சிலநாளைக்குமுன் இங்கிலாந்தில் ஏற்பட்டு, பார்லிமெண்டு சபையாரால் அங்கீகரிக்கப்பட்டு, இப்பொழுது மகாராணியாருடைய ஸம்மதியையும் பெற்றிருக்கிறது. முதலில் இந்தச் சட்டம் ஏற்படுத்தவேண்டுமென்று பார்லிமெண்டு சபையில் ஹௌஸ் அவ் லார்ட்ஸ் என்னும் பிரபுச்சபையிலிருந்து, ஹௌஸ் அவ் காமன்ஸ் என்னும் மகாஜன ஸபைக்குக் கொண்டுபோனபொழுது, அதுவிஷயத்தில் அவர்கள் முற்றும் விரோதமாயிருந்ததாகத் தெரியவருகின்றது. அது முழுமையும் தள்ளுபட்டுப்போகாமலிருக்கும்பொருட்டு ஒரு சமாதானம் செய்துகொள்ளப்பட்டது. ஆயினும் அந்தச் சமாதானத்தின்மேல் செய்த ஏற்பாட்டிலும், சாந்தமான ஜந்துக்கள், துஷ்ட ஜந்துக்கள், பழக்கப்பட்ட ஜந்துக்கள் பலவற்றையும் வேட்டையாடுவதும், துரத்தியோடச்செய்து வேடிக்கைபார்ப்பதும் குற்றமல்லவென்று விலக்கப்பட்டிருப்பது நமக்கு விசனத்தை யுண்டாக்குகிறது. வீடுகளில் எலிகளையும் பெருச்சாளிகளையும் பிடித்துச் செய்கின்ற சித்திரவதை இப்படிப்பட்டதென்று வாயினாலும் சொல்வது அசாத்தியமே. இவைகள் விஷயத்தில் கொடுமை செய்வதைத் தடுக்க அந்தச் சட்டம் இடங்கொடுக்கவில்லை யானாலும், இவைகளைப் போன்ற இவ்வுலகத்திலுள்ள வேறு பலவிதமான ஜீவன்களைத் துன்பப்படுத்துவது குற்றமென்று ஸ்தாபிக்கப்பட்டதனால், அவ்விதமான தீமை செய்பவர்களைத் தண்டிக்க இனி வழியுண்டாயிற்றென்று நாம் சந்தோஷப்படுவோம்.

வயிறுநிரம்பச் சோறு வேண்டுமென்று ஆவல்கொண்ட பெரும் பசிக்காரனுக்கு அரைவயிறு சோறு கிடைத்தால், அதைவேண்டாமென்று தள்ளிவிடலாமோ? புத்திசாலியாயிருப்பவன் வயிற்றுக்கு ஒன்றுமில்லாமலிருப்பதைப்பார்க்கிலும் வந்தமட்டும் வரப்பற்றுவது மேலென்று நினைப்பானன்றோ? அதுபோல நாமும் இவ்வளவாவது கிடைத்ததேயென்று நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும். இவ்வளவுகூட அங்கீகரிக்கப்படாமலிருந்தால், நாடுகளிலும் காடுகளிலும் சந்தோஷமாகத் திரிந்து கொண்டிருக்கிற ஆயிரக்கணக்கான பக்ஷிகளும், மிருகங்களும், நீர்வாழ்வனவாகிய மீன் முதலானவைகளும் மனிதர் செய்யும் கொடுமையினின்றும் காக்கப்படாதவையாகி மிகவும் வருத்தப்படுமன்றோ? ஜீவகாருணியமுள்ளவர் பலரும் ஜீவஹிம்சை நிவாரணச் சட்டத்திற்கு இதை முதல்படியாக வைத்துக்கொண்டு, இதன் மூலமாக மேலே மேலே இதை விருத்திபண்ணப் பாடுபடக்கடவர். இந்த விஷயத்தில் இந்தச் சபையின் விசாரணைத் தலைவரான கிரீன் துரை பட்ட பிரயாசைகளைக் கொண்டாடியாவரும்நன்றியுள்ளவராயிருக்கக்கடவர்கள்.

பறவைகளும் நாலுகால் ஜந்துக்களும்.

(இன்னிசை வெண்பா.)

பறவைக ளில்லெனிற் பாரில்லை; இல்லை
கறவைமா டில்லெனிற் காணுஞ் சுகங்கள்;
உடையில்லை யாடின்றேல், நாகரிகம் உண்டோ
நடைக்குதிரை இன்றேல் நமக்கு.

இயற்கையறிவா செயற்கையறிவா.

வாயில்லா ஜந்துக்களுக்குள்ள அறிவு இயற்கையறிவென்றும், செயற்கையறிவு இத்தன்மையானதென்றும், அவ்விரண்டிற்குமுள்ள வித்தியாஸம் இப்படிப்பட்டதென்று பூர்வத்தில் நுட்பமாகப் பகுத்தறிந்திருந்தார்கள். இக்காலத்திலோ மனிதர் தவிர மற்றப் பிராணிகளுக்கும் கல்வி கேள்விகளாலுண்டாகிய செயற்கையறிவு உண்டென்று பலர் எண்ணுகிறார்கள். இந்த விஷயத்தை நம்பாதவர்களும், நமது வீடுகளில் நடமாடிக்கொண்டிருக்கிற சாதாரண ஜந்துக்கள் காரியகாரண சம்பந்தங்களைத் தெரிந்துகொண் டிருக்கின்றனவென ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

வீடுகளிலே செல்வமாக வளர்க்கப்படுகிற பேசும் பக்ஷிகளை இதற்குத் திருஷ்டாந்தமாக எடுத்துப் பார்ப்போம். இவைகளில் பல மனிதர் பேசும் பாவனையாகவே சில வார்த்தை சொல்லுவது வழக்கம். சில பிராணிகள் செயற்கையறிவுள்ள மனிதரைப்போல அந்தந்தச் சமயத்திற்கு உசிதமான வார்த்தைகளைச் சொல்லுகின்றன. பின்னும் அதிகமான அன்புடனே பேசப் பழக்கினால், இந்தப் பேசுந்திறமைகள் அவற்றிற்கு இன்னும் விருத்தியாகும். இதைச் சில பக்ஷிகளிடத்தில் கண்டிருக்கிறோம்.

ஒரு நகரத்திலே சிங்காரவனத்தில் இப்படிப் பேசும் பக்ஷி ஒன்றை நானும் என்னுடைய நேசனும் பார்த்தோம். நாங்கள் என்னவோ சொல்லிக்கொண்டிருக்கையில், அந்தப் பக்ஷி உங்களுக்கு என்னவேண்டும் என்று கேட்டு நாங்கள் திடுக்கிடும்படிச் செய்தது. அது ஊரெங்கும் திருடிக் கத்துகிற காக்கையினத்தில் சேர்ந்தது. இதற்குப் பேச நன்ருகப் பழக்கினுல், இன்னும் நல்ல பேச்சுக்களெல்லாம் பேசுமல்லவா?

இதே ஜாதி மற்ருெருபக்ஷி, திட்டுவது, ஆணையிடுவது முதலான துர்ப்பாஷைகளைப் பேசக் கற்றுக்கொண்டிருந்தது. அவற்றைச் சொல்லத்தகாத காலங்களில் அது சொன்னதனுல், அதற்காக அதை மூன்றுமாதகாலம் வேறு ஒரு ஊருக்கு அனுப்பிவிட்டார்கள். திரும்பி வந்தபொழுது அந்தச் சொற்களை அது மறந்துவிட்டு, தன் வீட்டுக்காரி சொல்லுகிற பேச்சை யறிந்துகொள்ளவும், தன் விருப்பத்தைச் சொல்லிக்கொள்ளவும் தெரிந்துகொண்டிருந்ததனுல், எல்லாரும் அதனிடத்தில் பக்ஷமாயிருந்தார்கள். அதற்கு ஜலதோஷங் கண்டபோது, 'எனக்கு உடம்பு சவுக்கியமில்லை'யென்று குழந்தைகள்போலப் பலதரம் சொல்லிக் கண்ணீர்விட்டது.

பேசப்பழகிய ஒருகிளி காலையிலும் மாலையிலும் வீட்டுக்கு வருகிறவர்களுக்கு வந்தனஞ்சொல்லி, இனிப்பான கேள்விகளும் கேட்டு, அவர்கள் சந்தோஷப்படச் செய்தது. அண்டையயல் வீட்டாருடைய பெயர்களைச் சொல்லவும், அவர்களில் சிலருடைய குரல்சாயலை யறிந்து அவர்கள் சொல்லும் சொற்களை அதேவிதமாகத் திருப்பித் திருப்பிச் சொல்லவும் வழக்கப்பட்டிருந்தது. குளிர் அதிகமானபோது தன்னுடைய வருத்தத்தைத் தெரிவிக்கவும் திறமையுடையதாயிருந்தது. அதைப் பார்த்தவர்களெல்லாம் இதற்கும் செயற்கையறிவு இருப்பதுபோல் தோன்றுகிறதேயென்று நினைத்தார்கள்.

ஸியாம்தேசத்தில் ஸ்திரீகள் குழந்தைகளை யானைகள் காக்கும்படி விடுகிருர்கள். அந்தக் குழந்தைகள் யானையின் பெரியகால்களின் கீழ் விளையாடும்பொழுது, அவை யெங்கே தன் கால்பட்டு வருத்தப்படுகின்றனவோவென்று வெகு ஜாக்கிரதையாக யானை பார்த்துக்கொண்டிருக்கும். குழந்தைக்கு ஏதேனும் பெரிய அபாயம் நேரிடுமென்று தோன்றினுல் அப்பொழுது, புத்திகூர்மையுள்ள செவிலித்தாய்போல் தன் துதிக்கையினுல் குழந்தையை மெதுவாக வளைத்தெடுத்துத் தொட்டிலாடுவதுபோல மேலே தூக்கி, அதற்கு அபாயம் உண்டாகாதபடி வேகமாகத் தன் முதுகின்மீது வைத்துக்கொள்ளும்.

இவைகளெல்லாம் செயற்கை யறிவினுலுண்டான அதிசயச் செய்கைகள் போன்றனவல்லவா?

குதிரை லாயங்களைப்பற்றிய திருத்தங்கள்.

1. குதிரை லாயமானது நன்ருய் உலர்ந்தும், சரியான வெளிச்சமுள்ளதாயு மிருக்கவேண்டும். ஏனெனில், அசுத்தமாகிய ஈரத்தரையிலுண்டாகும் ஆவி மிகவும் கொடியது. இருள் நீங்கும்போது திடீரென்றுண்டாகும் வெளிச்சம், குதிரைகளுக்குக் குருட்டுத்தனத்தை யுண்டாக்குகின்றது. (ஈரம் குதிரைகளுக்கு அதிகமான தீங்கைத் தருவதால், ஜலதோஷம், இருமல், பிடிப்பு, இவை யுண்டாகின்றன. சுத்தியற்ற ஈரமான லாயத்தால் குளம்புகள் வெடித்துப் புண்ணுகிவிடுகிறதாம்.)

2. லாயத்தின் தரை குதிரையின் முகமிருக்குமிடத்தைப்பார்க்கிலும், பின்புறம் தாழ்வாயிருந்தால், குதிரைகள் நிற்கச் சங்கடப்படுவதுடன் தசைநரம்புகளுக்கு நோயுண்டாகி, நொண்டியாய்ப் போம். ஆகையால் லாயத்தின் தரை மேடு பள்ளமின்றிச் சமமாயிருக்கவேண்டும்.

ஒருகால் லாயத்தின் தரை மேடுபள்ளமாயிருக்குமாகில், செத்தைகளைப் பரப்பிச் சமப்படுத்தவேண்டும்.

3. குதிரைகள், காயப்படுத்திக் கொள்ளாமல், தாராளமாய்த் திரும்பவும், படுக்கவும், கால்களை நீட்டவுங்கூடியதாய், ஒவ்வொரு லாயமும், குறைந்தபக்ஷம் 6 அடி அகலம், 9 அடி நீளமுள்ளதாயிருக்கவேண்டும். குதிரைகள் கட்டுக்கடையில் நிற்கக்கூடிய சாதாரணமான சிறிய அறைகளை, குதிரைகள் சுயேச்சையா யிருக்கும்படியான அறையாய் மாற்றுவது மிகவும் நல்லது. ஏனெனில், லாயத்தில் குதிரையின் தலையும், தேகமும் ஓயாமல் ஒரேபக்கமாய்க் கட்டப்பட்டிருந்தால், குதிரை இளைத்துப் போவதுமன்றி, கடித்தல், திமிருதல், கனைத்தல் முதலான கெட்டகுணங்களை யடைகிறது. சாதாரணமான லாயத்தை வெளியில் அடைத்து, குதிரையைக் கட்டின்றி உள்ளே விட்டுவிடுவதில் அதிக குணமுண்டு. ஏனென்ருல், குதிரை தனக்கிஷ்டமான விடத்திலிருக்கவும், ஓரிடத்தி

விருந்து களைப்படைந்தபோது மற்றோரிடத்திற்கு இஷ்டப்படி மாறவுங் கூடும்.

4. ஒரு குதிரைக்கு ஏற்பட்ட அங்கணத்திற்கும், மற்றோர் குதிரை யங்கணத்திற்கும் மத்தியில் தடை 5 அடி உயரமான சுவரால் கட்டியிருக்க வேண்டும். அந்தச் சுவருக்குமேல் குறுக்குக்கழி அடைப்புமிருந்தால் குதிரைகள் ஒன்றுக்கொன்று தீங்குசெய்யாமல் ஒன்றையொன்று பார்க்கக்கூடும். குறுக்குக்கழியால் தடுக்காவிட்டால் ஒன்றுக்கொன்று தீங்குசெய்யும்.

5. லாயத்தில் ஒவ்வொரு அங்கணத்து வாயிலும் போதுமான அளவு அகலமும் உயரமுமுள்ளதாயிருக்கவேண்டும். ஏனெனில், வழி நெருக்கமாயிருப்பதால், குதிரைகள் போகும்போது காயப்படுவதன்றியும் முதுகுதண்டு உடைந்துபோவதுமுண்டு. தாழ்வாயிருந்தால் தலை இடியுண்டு காயப்பட்டு வேதனைக்கிடமுண்டாகும்.

6. வழுக்கான கற்களை வாயிற்படியில் தளவரிசையாகப் போடக்கூடாது. அதனால் குதிரைகள் சறுக்கிக் கீழே விழ இடமாகும்.

7. அசுத்தமான வெப்பக்காற்று வெளிப்பட லாயத்தின் கூரைக்குக் கீழ் துவாரமும், சுத்தமான காற்று உட்புகச் சுவரின் அடிவாரத்தில் துவாரமும் செய்திருக்கவேண்டும். அசுத்தமான காற்றால் நுரைஈரலைப் பற்றிய வியாதியும், மற்றுமுள்ள தொத்துவியாதிகளு முண்டாகும்.

8. ஜன்னல் முதலான பெரிய சாளரத்தின் மூலமாகக் காற்று உட்புகுவதைக்காட்டிலும், சிறிய துவாரத்தின் வழியே செல்வது உத்தமம். ஏனெனில், சாளரத்தின் மூலமாகச் செல்லுங் காற்றால் ஜலதோஷம், இருமல் முதலான நோய்கள் உண்டாகும். சிறிய துவாரங்களோ கெட்டகாற்று உட்புகாமல் தடுக்கும்.

9. மிதமிஞ்சிய உஷ்ணமும், குளிர்ச்சியுங் கெடுதலானபடியால், லாயங்களில் கோடைக்காலத்தில் உஷ்ணம் மிதமாயிருக்கவேண்டும்.

10. குதிரைகளைக் கொல்லவேண்டுமானால் தான், உஷ்ணமும், நெருக்கமும், அசுத்தமுமான லாயத்தை உபயோகிக்கலாம். அப்படிப்பட்ட லாயத்தில் சுவஸ்தப்படுத்தக்கூடாத இருமலும் நுரைஈரலைப் பற்றிய நோயும் நிச்சயமா யுண்டாகுமென்பதை யறியவேண்டும்.

(இன்னும் வரும்.)

தூக்கணங்குருவியும் கருங்குருவியும்.

(அறுசீர் விருத்தம்.)

ஓங்கு கோபுரம் கொடுங்கை உயர்ந்தமா மரங்கள் மீது
தூங்கிய கூடு கட்டித் தூக்கண மூஞ்சு லாட
வாங்கு மாடப் புருவும் வலியனும் விருந்த ழைக்கப்
பாங்குடன் கோடைக் காலம் பாரினில் வந்த தன்றே.

ஜந்துக்களைச் செய்யும் கொடிய பரீக்ஷைகள்.

இங்கிலாந்திலே சென்ற வருஷம் வைத்திய சாஸ்திரிகள் தேகதத்துவ பரிசோதனை செய்வதற்காக சாஸ்திரப்படி சஸ்திரத்தினால் அங்கச்சேதம் செய்த ஜந்துக்களின் தொகை 8470 என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். அதற்கு முன்வருஷம் 9150 ஜீவன்களைச் சோதனை செய்தார்களாம்.

உயிரோடிருக்கிற ஜீவன்களைப் பிடித்துக் கால்களையும், குடல்களையும், நரம்புகளையும், நாடிகளையும் அறுத்துப் பலவிதமாகச் சித்திரவதை செய்வதென்றால் இவைகளைப்பார்க்கிலும் அவற்றிற்குக் கொடிய இம்சை வேறென்ன வேண்டும்! ஜந்துக்கள் உணர்ச்சியோடிருக்கும்பொழுது அவற்றை ஒருவிதமான இம்சையும் செய்யக்கூடாதென்றும், உறுப்புக்களையறுத்துச் சாஸ்திர பரிசோதனை செய்யவேண்டியது அவசியமாக நேரிட்டால் அப்பொழுது அவைகளுக்கு மயக்கங்கொடுத்து முற்றும் உணர்ச்சியற்றுப் போகும்படிசெய்து மறுபடி அந்த மயக்கந் தெளிவதற்கு முன்னே வேண்டுமளவு பரிசோதனைசெய்து முடிக்கவேண்டுமென்றும், இவ்விஷயத்தை முற்றும் அந்தந்தக் கல்விச்சாலைத்தலைவர்கள் அதீனத்திலேயே விடாமல், ஜீவன்களுக்கு இம்சை சிறிதுமில்லாதபடி சரியாகச் சோதனை செய்யப்படுகிறதாவென்று துரைத்தனத்தார் மேல்விசாரணை பார்த்து வரவேண்டுமென்றும், இதற்கு விரோதமாக நடப்பவர்கள் தண்டனைக்கு ஆளாகும்படி சட்டம் ஏற்படுத்தவேண்டுமென்றும், இங்கிலாந்தில் ஜீ—ஹி—நி—சங்கத்தார் ராஜாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படியே ஒரு சட்ட மேற்பட்டால் பல ஜீவன்களுக்கு ஹிம்ஸை உண்டாகாமல் ஒழியுமன்றோ.

பலருக்கு வைத்தியஞ்செய்து வைத்திய சாஸ்திரத்தில் தேர்ச்சிபெற்ற பண்டிதர் ஒருவர் சொல்வதாவது:—குடல்களைக் கிழித்தும், நரம்புகளை உரித்தும், தாடைகளை நசிக்கியும் இப்படிப் பலவிதமாக நாய் முதலான பல வாயில்லா ஜீவன்களை இம்சிப்பதனால் கண்டறிந்த புதுமைகளால் வைத்திய சாஸ்திரத்திற்கு இதுவரையும் ஒரு நன்மையும் உண்டாகக் காணேன். நல்ல சுகமான தேகத்திலுள்ள உதிரம் மாமிசம் முதலியவைகளுக்கும், நோயாளிகளின் தேகத்து உதிரம் மாமிசம் முதலியவைகளுக்கும் அதிகவித்தியாசம் உண்டாகையால், இந்தச் சோதனையினால் ஒரு நன்மையும் காணப்படவில்லை. கோரமான ஜீவ ஹிம்சையும் பாவமுமாத்திரமே இதன் பயனாக முடிந்தனவாகையால், இனி இப்படிப்பட்ட சரீரசோதனையும் சித்திரவதையும் செய்யக்கூடாதென்று சட்டமேற்படுத்துவதே அவசியமென்று சொல்லிப் பிரசங்கம் செய்தார்.

ஜீவகாருணியப் பயிற்சிக்காக ஏற்படும் சிறுவர் கூட்டம்.

ஜீவகாருணியப் பயிற்சிக்காகச் சிறுவர்கள் கூட்டம் சேரவேண்டியது அவசியம். ஏனென்றால், அப்படிச் சேருவதனால்,

1. சிறுவர்களுக்குப் பிராணிகளிடத்தில் பக்ஷமாயிருக்கும்படியான வழக்கமுண்டாகும். அதனால், அவர்களுடைய ஒழுக்கங்கள் இளகினவைகளாகி, பிறகு மனிதர்களிடத்தில் அன்புள்ளவர்களாயிருக்க வழியுண்டாகும்.

2. சிறுவர்கள் உருக்கமுள்ள நெஞ்சுடையவராவார்கள். அதனால் எளிய ஜந்துக்களிடத்தில் ஐயோ பாவம்! என்கிற இரக்கமுண்டாகும்; அதன்மூலமாய், திக்கற்றவர்களும் துக்கப்பட்டவர்களும், துன்பமடைந்தவர்களுமான பல மனிதர்களுடைய கஷ்டங்களையும் துன்பங்களையும் போக்கிச் சமாதானப்படுத்துகிற பெருந்தன்மையுண்டாகும்.

3. வீட்டு மிருகமோ, காட்டு மிருகமோ, எதுவானாலும், அவற்றினிடத்தில் சிறுவர்கள் தாம் செய்யவேண்டிய கடமை இன்னதென்பதைத் தெரிந்துகொள்ள வல்லவராவார்கள். இந்தக் கடமையை நாம் செய்து முடித்தால், அதுவே சிருஷ்டிகர்த்தாவுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளில் ஒரு பகுதியைச் செய்ததாகும்.

4. ஜீவஜந்துக்களுடைய உருவமைப்பும், வழக்கங்களும், குறைகளும் இப்படிப்பட்டவையென்று சிறுவர்கள் கற்றறிந்துகொள்ளக்கூடும். அவைகளைத் தெரிந்துகொண்டால், அந்த ஜந்துக்களை உபயோகமான நல்வழியில் அன்புடனே நடத்தவும், மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் பக்ஷிகளுக்கும் அவரவர் செய்யக்கூடிய நியாயம் இன்னதென்பதை மனத்தில் நன்றாய்ப் பதிந்துகொள்ளவும் வல்லவராவார்கள்.

5. ஜீவகாருணியப் பயிற்சிக்கூட்டத்தில் சேர்ந்து பக்ஷமுள்ளவர்களாயிருக்கப் பழகிய சிறுவர்கள், பிறகு பெரியவர்களாகிப் புருஷர்களும் ஸ்திரீகளுமாகும்பொழுது, உணர்ச்சியுள்ள எந்த ஜீவனிடத்திலும் கொடுமையுள்ளவர்களாயிருக்க மாட்டார்களென்பது நிச்சயம். அதனால் அவர்கள் நாகரிகத் தேர்ச்சிபெற்ற சற்புருஷராவார்கள்.

6. ஜீவஜந்துக்களைக் கிரமப்படி நியாயமாய் நடத்துவதனால் அந்த ஜந்துக்களுக்குச் சவுக்கியம் அதிகப்படுமென்றும், அதுவே சிறுவர் பெரியோராகிய பலருக்கும் அகமகிழ்ச்சி யுண்டாவதற்கு ஏற்ற சாதனமாகுமென்றும் தெரிந்துகொண்டு, சிறுவர்கள் ஜீவகாருணியமாகிய சற்குணத்தைத் தாமே பயிற்சிசெய்துகொள்ளத் திறமையுடையவராவார்கள்.

பாடசாலைப் பிள்ளைகள் பாட்டு.

கண்ணிகள்.

பல்லவி.

உலகீர் வாரீர் ஒருமனத் துடனே,
உலகின் தலைவனை ஓங்கியே புகழ்வோம்.

அனுபல்லவி.

நலமாய்ப் போற்றி நமஸ்கரித்து
நலங்களைச் சொல்லி நாடித் தொழுவோம். (உலகீர்.)

சரணங்கள்.

அகில உலகமும் அவனது புகழே
அகில உலகமும் அவனது ஆட்சி
அகில மிருகங்களும் அவன் படைப்பே
அகிலப் பறவையும் அவனது காப்பே. (உலகீர்.)

அடாதது செய்தால் படாதது படுவோம்
அச்சமும் அடக்கமும் அவனிடங் கொள்வோம்
அருளே அவன்விதி மருளே விலக்கு, நாம்
அனைவருங் கொண்டு அன்புடன் நடப்போம். (உலகீர்.)

S. P. C. K. Press, Vepery, Madras—1900.